கமிஷனாகப் பெற்ற பணம் எவ்வளவு என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விசாரித்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்தப் பணத்தையும் சேர்த்து வாங்கிக் கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களைச் சுரண்டுகிற கொடுமையில் நிதி நிறுவனங்கள் ஒருபுறம் ஈடுபடுகின்றன. மறைமுகமான சுரண்டலில் தொலைக்காட்சிகளும் ஈடுபடுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். இது வேதனையான ஒன்றுதான். அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டு நிதி நிறுவனங்களை ஆட்டிப் படைத்து மறைமுகச் சுரண்டலில் ஈடுபட்டு மக்களைச் சுரண்டுகிற இதுபோன்ற நடவடிக்கைகளை புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில் கண்டிப்பாகத் தலையெடுக்க விடமாட்டோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். திரு. எ.வ. வேலு.

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வைதியலிங்கம், உங்கள் கட்சி உறுப்பினர் நிற்கிறார். அவர் கேட்கட்டும்.

21 ஆகஸ்ட் 2001]

*திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am on a Point of Order. நான் நேரத்தை அதிகம் எடுத்துக்கொள்ளவில்லை. இரண்டு பாயின்டையும் சேர்த்து ஒரு Point of Order-ல் கேட்கிறேன். முதலில் என்னுடைய தொகுதியில் ஏற்பட்ட வெடிமருந்து விபத்து குறித்து நேற்றுகூட நான் கேட்டேன். அதை இன்றைக்கு Adjournment Motion-ல் எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னீர்கள். அதை இன்று எடுத்துக்கொள்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன். அது No.1. No.2— நேற்று நான் பார்த்தேன். டி.வி. கேமரா எல்லாம் வைத்திருந்தார்கள். அது live-ஆக இருந்தது. மக்கள் எல்லோரும் வெளியே பார்த்தார்கள். நேற்றும் வைத்திருந்தார்கள். இன்றைக்கும் வைத்திருக்கிறார்கள். அதை யார் எடுக்கிறார்கள்? எனக்கு யாரையும் தெரியாது. யார் எடுக்கிறார்கள்? Films Division எடுக்கிறதா அல்லது Doordarshan எடுக்கிறதா? நேற்று live இல்லாமல் news items மட்டும் காண்பித்தார்கள். அப்படியென்றால் அதை யார் edit பண்ணுகிறார்கள்? அதில் ஆளும் கட்சி, எதிர்க் கட்சிகளுக்கு எல்லாம் சரிசமமாக வாய்ப்பு அளிக்கப்படுமா? எனக்கு யார் எடுக்கிறார்கள் என்று தெரியாது. தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை வழங்குகிறபோதும், நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்போதும் எல்லாப் பத்திரிகையாளர்களும், எல்லாத் தொலைக்காட்சி நிறுவனங்களும் இங்கே படம் பிடிக்க, செய்தி திரட்ட அனுமதிக்கப்படுகின்றனர். அதைப்போலவே நேற்றைய முன்தினம் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டபோது எல்லா டி.வி. சேனல்களுக்கும் இங்கே வாய்ப்பு தரப்பட்டது. அதன்பிறகு, நேற்றும், இன்றும் இங்கே படம் பிடித்துக்கொண்டிருப்பது Films Division கேமராக்கள்தான். எடிட் செய்வது Films Divisionதான். அவர்களே எல்லாத் தொலைக் காட்சிகளுக்கும் இந்தச் செய்திகளைத் தருகிறார்கள். படங்களைத் தருகிறார்கள். அந்தந்த டி.வி. சேனல்கள் அவர்களுக்குப் பிடித்தமான பகுதியைப் போட்டுக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன். உங்களுடைய முதல் கேள்விக்குத் துறையிடமிருந்து பதில் வந்தவுடனே எடுத்துக்கொள்ளப்படும். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: 3 இலட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள் தமிழகத்திலே போராட்டத்திலே குதித்திருக்கிறார்கள். 1300 தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இது குறித்து, நான் ஏற்கெனவே ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். அது

எப்போது எடுத்துக்கொள்ளப்படும்? இன்று தயாராக இருந்தால் எடுத்துக்கொண்டால் நல்லது. காரணம், அவர்கள் பணிக்குத் திரும்ப வேண்டிய ஒரு நிலை. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக, அது எடுத்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசுத் துறை பதில் வந்தவுடன் அதை எடுத்துக்கொள்ளலாம்.

திரு. இ. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது பதில் சொல்கிறபோது ஆளுநர் உரையின்போது அனைத்துத் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் இங்கே வாய்ப்புக் கொடுத்ததாகச் சொன்னார்கள். ஆனால், நிதிநிலை அறிக்கை இங்கே வாசிக்கப்படுகிறபோது எந்தெந்தத் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது என்பதைத் விளக்குவாரா?

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலான தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு live relay செய்கிற வசதி இல்லை. Doordarshan-க்கு இருக்கிறது. சன் டி.வி-க்கு இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால், மற்ற தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு அந்த வசதி இல்லை. ஆகவே, அவர்களே live relay செய்கிற வசதி இல்லாததால் இங்கே வாய்ப்புத் தரப்பட வேண்டியதில்லை என்று தெரிவித்துவிட்டிருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டபோது Doordarshan live relay செய்திருக்கிறது. Films Division அதை cover செய்திருக்கிறது. All India Radio cover செய்திருக்கிறது. மற்றபடி தொடர்ந்து Films Division Camera-க்கள்தான் இங்கே நடக்கிற நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ.வ. வேலு. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. ஆஸ்டின்: காவலர் தேர்வு நடைபெற்று இன்னும் அழைப்பு வராமல் ஏமாற்றப்பட்டிருப்பது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பிற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன். அதுபற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆமாம். கொடுத்து இருக்கிறீர்கள். அறையில் வந்து கேளுங்கள். (குறுக்கீடு) அறைக்கு வாருங்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

21 ஆகஸ்ட் 2001]

திரு. மீ.அ. வைதியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் தொகுதி சம்பந்தமாக சில கவன ஈர்ப்பு அறிவிப்புகளைத் தங்களிடம் தந்திருக்கிறேன். அது சம்பந்தமாக என்ன முடிவெடுத்தீர்கள்? அவை அவசர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மீ.அ. வைதியலிங்கம், நீங்கள் என்னுடைய அறைக்கு வருவதேயில்லை. வந்து விவரத்தைத் தெரிந்துகொண்டு வாருங்கள்.

முற்பகல் 10-40

4. திருத்திய வரவு–செலவுத் திட்டம் 2001–2002, பொது விவாதம்–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வேலு.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே மீண்டும் என்னுடைய குரல் ஒலிப்பதற்கு வாய்ப்பளித்த எங்களுடைய இயக்கத்தினுடைய கழகத் தலைவர் அருமை அண்ணன் கலைஞர் அவர்களுக்கும், எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிற பேராசிரியப் பெருமகனார் அவர்களுக்கும், எனக்கு உறுதுணையாக இருந்த சிங்காரச் சென்னையினுடைய செல்வ மகன் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், இந்த நேரத்திலே வாய்ப்பை அளித்த உங்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கை மக்களுக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. சென்ற ஆட்சியில் பணப்புழக்கமே இல்லை. நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பணம் புரளும், டீக்கடைக்குச் சென்றாலும்கூட டீ குடிப்பவன் 500 ரூபாயைக் கொடுத்துவிட்டு மீதியை வாங்காமல் வருகிற அடிப்படையில் நாம் வாழலாம் என்ற அடிப்படையில் வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் இன்றைக்கு ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள். ஒரு வரியில் சொல்ல வேண்டுமானால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே மக்கள் விரோத நடவடிக்கையை மேற்கொண்ட அரசாலே பணப்புழக்கமே இல்லை என்பது உண்மை